34 34

31-12-32

சென்னை

14-வது

நாடார் மஹாஜனங்கள்

நாடார் மஹாஜன சங்கத்தலைவர்

வை. தனாகரை நாடார்ன்

பிரசங்கம்.

பிரையாறு

ஸ்ரீ சத்ரிய வித்யாசாலை பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1932.

Y5926.N.21
N32
N32
219070

21907o



V. Kanagasabai.

Y5926.N.21/N32
N32



சகோதர, சகோதரிகளே,

நமது வருஷத்தின் சென்ற மகாநாடு கூடத்தினின் இதுவரை மூன்று வருஷங்களுக்குமேல் ஓய்வு காலமாக கழிந்து விட்டது. இதர ஒவ்வொரு வருஷத்தினரும் காலாகாலத்தில் நமது மகாநாடுகளை கூடத்தித் தத்தமக்குரிய காரியங்களையும்வேலைத்திட்டத்தையும்கவனித்துச் செய்துவரும் இக்காலத்தில் நம்காலம் மட்டும் பலனின்றிக் கழிந்துபோனதுபற்றி உங்களுக்குள்ள அனுதாப உணர்ச்சி உண்மையில் எனக்கு மூண்டு. நாம் ஓய்வு எடுத்துக்கொள்ளலாமென்ற நினைவு கொள்ளுவோமாயின் நமக்கு வருங்காலத்தில் விசேஷ பாதகங்கள் விளையக்கூடியதாயிருப்பதால் காம் அந்நினைவை மனதில் வைக்கும் காலம் இதன்று. சீர்திருத்தம், சுவாதீனம் விடுதலையென்ற இயக்கங்களின் மூலமாக நம்மைச்சுற்றிலும் பலமான ஒரு உணர்ச்சி தோன்றி வியாபித்திருப்பதை காம் அறிவோம். விசேஷ பலாபலன்களை விளைவிக்குமென எதிர்பார்க்கப்படும் பலமுக்கிய மாறுபாடுகள் ஏற்படவிருக்கும் ஒருகாலத்தை அபேக்ஷித்த வர்களாய் காம் இப்போது கூடியிருக்கிறோம். சரியாய் நூறுண்டுகளுக்குமுன் 1832-ல் இங்கிலாந்தில் தோன்றி பொதுஜன வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாறுபாடுகளை விளைவித்ததை ஒரு இயக்கம் இப்போது நமது வாழ்க்கையின் அரசியல் துறையில் ஏற்பட்டுள்ளது. மதவிஷயங்களில் நெடுங் காலமாய் அனுஷ்டானத்திலிருந்து வரும் பழக்க வழக்கங்கள், கொள்கைகள் நம்பிக்கைகள் சம்பிரதாயங்கள் முதலியன உலையிடப்பட்டு மாறுபடும் நிலையிலுள்ளன; சமு

தமிழ்நாடு அரசுப் பள்ளிக்கல்வித் துறை
தொடர்க்கவேண்டாம்

ஸ்நீகள், தாழ்த்தப்பட்ட வகுப்பி னர் சங்கங்களின் விடுதலைக்குரிய ஒருஇயக்கம் கடந்து வருகின்றது; செல்வ நிலையிலோ, உலகமெங்கும் ஒரே நிலையாய்க்கலந்துள்ள வர்த்தக மந்தம் நம்மையும் பாதிக் கின்றது. வாழ்க்கை நிலையின் ஒவ்வொருதுறையும் மாறு பாடடையும் சந்தர்ப்பத்திலிருக்கின்றது. இம்மாறுபா டுகளின் பலாபலன்க ளின்னவையென்று நாம்இப்போது யூகிக்கமட்டும் இயலும். இது சமயத்தில் மகா காடு கூடுவதென்பது உங்கள் மீதும் என்மீதும் மகத் தான பொறுப்புகளைச் சுமத்துகின்றது. சுமார் 20-லட்சம் பேர்களடங்கிய தமிழ்குப்பினருக்கு இந்நிலையில் தலைமை வகித்து நிர்வகிப்பதற்கு நான் எம்மட்டும் அருகனல்ல என்பதை உங்கள் எல்லோரைப்பிடி நான் கன்கறிவேன். ஆயினும் நான் உணர்ந்திருப்பதும், உங் களுக்கு உணர்விக்க விரும்புவதுமான விஷயம் ஒன் றுண்டு. அதாவது, இம்மகாநாடு ஆழ்ந்த ஆலோசனை யினும், செய்கையளவினும் முழு கவனத்தைச்செலுத்த வேண்டும். இதனாலேயே எனது குறுகிய இந்தப்பிர சங்கத்தில், பழக்கமாய் இவ்வித மகாநாடுகளுக்கென ஏற்பட்டுள்ள உற்சாக மொழிகள் அதிகம் நான் கூற வில்லை. நாம் விரைவில் கவனித்து கடந்த வேண்டிய சிலகாரியங்களைப்பற்றி நான் இப்போது எடுத்துரைக் கிறேன்.

878
301.44

நம்மெதிர்காலம்.

அரசியற்துறையில் ஏற்பட்டிருக்கும் மாறுபா டுகளினால் தத்தம் வகுப்பின் கௌரவமும், மதிப்பும் அதிகரிப்பதற்கான அரிய பலகர்ப்பங்கள் வாய்க்கு

மென ஒவ்வொரு வகுப்பினரும் ஆவலாய் எதிர்பார்த்த படியா யிருக்கின்றனர். அதேவிதமாய் நமக்கும் சந் தர்ப்பங்கள் ஏற்படுமென நான் நம்புகிறேன். இவை கள் ஏற்படுங்காலத்தில் அவைகளைத்தழுவி, நம்கலத் தின்பொருட்டும் முன்னேற்றத்திற்கும், நாம் அவை களைப் பயன்படுத்துவதற்கு யோக்கிய தாம்சங்களை விருத் தியசெய்து ஆயத்தமாயிருப்பதைப் பொருத்தே நமக்கு மேன்மையோ, தாழ்வோ, ஏற்படும். புதிய மாறுபாடு களுக்கேற்ப நமது வேலைத்திட்டமும் மாறுபடவேண் டியிருக்குமாதலின் அம்மாறுபாடுகளும், அவைகளால் விளையும் சந்தர்ப்பங்களும் இன்னவைகளென்பதையும் அவைகளை உத்தேசித்து நாம் எவ்விதமாய் ஆயத்தப் படவேண்டுமென்பதையும் ஆலோசிப்பது இம்மகாநாட் டின் கடமையாகும். நமது ஆயத்த விஷயத்தில் எத்த ஒரு நிர்மாண திட்டத்திலும் எதிர்பார்த்த முடிவையே நாம் பெற முயற்சி செய்வோம். இந்த சமயத்தை நாம் சரிவர உணர்ந்து அதற்கேற்ப நாம் நடந்துகொள் ளாம லிருப்பது நமது வகுப்பினர் அந்தஸ்தையும் கன மநிப்பையும் மேன்மைப்படுத்துவதற்கு ஏற்ற சந்தர்ப் பங்களைக் கைவிடுவதை யாருமென நான் அஞ்சுகிறேன்.

மாறுபாடுகள்.

தற்போது ஆலோசனையி லிருந்துவரும் அரசியல் மாறுபாடுகளின் பயனாக ஸ்திரீகளுக்கும், தொழிலா ளர்களுக்கும் இப்போதிருப்பதை விட அதிகப் பிரதி நிதித்வம் ஏற்படுமானு, அவர்களின் வாக்குரிமை யோக் கியதாம்சம் நிர்ணயிக்கப் படுமென்றும், சிறு பான்மை வகுப்பினருக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும்

போதுமான பிரதிநிதித்வம் வழங்கப்படுமென்றும், வாக்காளர்களுக்குரிய யோக்கியதாம்சம் குறைக்கப்படுவதால் அதிகமான பேர்கள் வாக்குரிமை பெறுவார்களென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. லோதியான் கமிட்டிச்சிபார்சுகளின்படிக்குங்கூட இப்போது அத்தத்த மாகாண ஜனமொத்தத்தின் 3-சதவீதமும் வயதுவந்த ஆண்களின் தசவீதமும் உள்ள வாக்காளர்களின் தொகை முறையே 14-சத வீதமும் 27-சத வீதமுமாக அதிகப்படும். மத்திய சட்ட சபையின் வாக்காளர்களின் தொகையோ இப்போது ஜனமொத்தத்தின் நூறிலொரு பக்கேயாகும் இதையும் அதிகப்படுத்த வேண்டுமென்ற ஆலோசனை யிருந்து வருகிறது. இனிமேல்தான் வாக்குரிமை யோக்கியதை ஸ்திரீகளுக்கு வேண்டியிருக்கும் நம் ஸ்திரீகள் பிரதிநிதித்வ விஷயமும் கருத்துடன் கவனிக்கப்பட்டுவருகின்றது. வேறு தகுந்த யோக்கியதாம்சம் எதுவும் நிர்ணயிக்கமுடியாத நிலையாயிருப்பதால் அவர்களின் கல்வியையோ, கணவர்களின் சொத்துரிமையையோ ஆதாரமாகக் கொண்டு அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் விஷயம் ஆலோசனையிலிருந்து வருகின்றது. ஸ்திரீகளின் 10-ல் ஒருபங்கினருக்கு இப்போது வாக்குரிமை யளிப்பதென்றும் சமஷ்டியின்முதல் 10-வருஷகாலம் மாகாண சபைகளின் ஸ்தானங்களில் 2-ல் சதவீதம் ஸ்திரீகளுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இந்த சிபார்சுகள் அமுல்நடானத்திற்குக் கொண்டுவரப்படுவதில் எவ்வளவு கஷ்டங்கள் உள்ளனவென்பதை இந்த சுருக்கப்பத்தில் நான் எடுத்துரைக்க விரும்பவில்லை. ஆனால் இக்குறிப்பு விபரமாக இந்த விஷயத்தை நான் கூறியதன் நோக்

கம் நமக்குக்கிடைக்க விருக்கும் சுதந்திரங்களையும், பொறுப்புகளையும் நாம் நழுவவிடலாகாதென்ற ஆவலுடையவர்களா யிருப்பின் எவ்வித மாறுபாடுகள் ஏற்படலாமென்பதையும், அவைகளின் நிமித்தம் நாம் எவ்வித வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவேண்டுமென்பதை நீங்கள் உணர்ந்து ஒருமுடிவு செய்யும்பொருட்டேயாம்.

வேலைத்திட்டம்.

இனி நாம் எக்கருத்துகளில் நம்முயற்சிகளைச் செலுத்தலாமென்பதுபற்றி உங்களுக்கெடுத்துரைக்கிறேன். நம் நாட்டிற்கென நிர்மாணம் செய்யப்பட்டு வருவதாக நமனைவரும் எதிர்பார்க்கும் குடிகளுக்குகந்த தரைத்தன முறையில் பொதுஜன அபிப்பிராயமென்பதுமிகவும் முக்கிய மடையுமென்று நாம் எல்லோரும் அறிவோம். ஆகவே வரப்போகும் மாறுபாடுகளின் விசேஷத்தைச்சரிவர மதித்தறிதற்குரிய அரசியல் அறிவுடன் கூடிய பொதுஜன அபிப்பிராயத்தை நம் ஜனங்களினிடையே நிலவச்செய்யவேண்டுவது நமது முதற் கடமையாகும். இது ஒரு பெருத்த பொறுப்பென்பதற்கு ஆக்ஷேபணை யில்லை.. இதை நிறைவேற்றுவதற்கு முறையானதும் தீவிரமானதுமான பிரசாரம் அவசியமாகும். வகுப்பு முன்னேற்றத்திற்கும் தேசப்புனருத்தாரணத்திற்கும் ஆதாரமான அரசியலறிவு,ஒத்துழைக்கும் மனப்பான்மை என்ற குணங்களையடைப்பெற்ற ஜனங்களான ஒரு வகுப்பாக நம்வகுப்பை நாம் அமைக்கவேண்டும்.

வகுப்பு முன்னேற்ற விஷயங்களில் பலன்தரு மாறு கலந்து அதன் எல்லா வேலைகளிலும் ஈடுபடுவதென்பது மக்கட்கல்வியபிவிருத்தியையே ஆதாரமாகக் கொண்டது. மக்கட்கல்வி என்பது தற்காலத்தில் நம்

நாட்டிலெங்குமுள்ள பாடசாலைகளில் போதிக்கப்பட்டு வரும் எண், எழுத்து, வாசிப்பு என்ற மூன்று விஷயங்க ளன்று. ஆனால் தற்காலத்திற்குத் தேவையான மக்கட் கல்வி, அரசியல், துரைத்தன விஷயங்களில் அறிவையூட் டத்தகுந்த கல்வியேயாகும். இந்த வேலையை எளிதில் நமது சங்கமே மேற்கொண்டு நடத்தவேண்டுவது சாத் நியமாகும் அவ்வாறு நடத்தவேண்டுவது அதன் கடமை யுமாகும். நம் வகுப்பினர் எங்கெங்கு குடியேறி வாசஞ் செய்கின்றனரோ அங்கெல்லாம் இன்பச்சங்கங்கள் ஸ்தா பிக்கப்பெற்று அவை ஒவ்வொன்றும் தாய்ச் சங்கத் தோடு இணைக்கப்படுமாயின் அது ஒரு பெருத்த ஆதர வாயிருப்பதோடு நமது வேலையும் எளிதாய்விடும். எவ் விஷயத்திற்கும் ஒரு ஐக்கியத்தை நிட்டமொன்றுபோது வது இக்காலத்திய சம்பிரதாயமாகிவருகிறது. ஆனால் இவ்வேலையில் நாம் உடனே சுறுசுறுப்பைக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை நான் உங்களுக்கு வற்புறுத் துகிறேன். ஏற்கனவே மிகுந்த ஊக்கத்துடனும் உற் சாகத்துடனும் வேலைசெய்து வந்த சில இன்பச்சங்கங்கள் இப்போது ஒய்ந்து காளடைவில் படிப்படியாய் கூனி குறையடைந்து வருவது வருத்தத்தக்கதாயிருக்கின்றது. இவைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அந்தந்த இடங்களில் முன்னேற்றம் தடைப்படுவதன்றி இவைகளின் கூனற் நிலை தாய்ச் சங்கத்தின் மதிப்பு எவ்வாறு பாதிக்கப் படுமென்பதையும் நான் கூறுமலே நீங்கள் அறிவீர்கள். இந்தத் திட்டத்தின் பொருட்டு நிரவிய சகாய மும், மனித சகாயமும் தேவையானவை. இவைகளை விட நிதிப் பிரசாரத்திற்கான தொண்டாற்று உளர்களே மிகுதியும் அவசியமாகும். இதைப்பற்ற

மாக எத்தனை மகாகாடுகள் கடைபெறினும் அதனுலெவ்
வித அபாயமும் ஏற்படாது. பிரசாரத்திற்கு வேண்டிய
மனிலி சகாயத்தையும் பொருளையும் சேகரித்துக்கொடுக்
கும் பாக்கியத்தில் நாம் ஒவ்வொருவரும் பங்குபெற
வேண்டும். சங்கத்தின் அங்கத்தினர்கள் இவைகளைச்
சேகரித்துக்கொடுக்கவேண்டுமென்று சங்கம் எதிர்பார்க்க
பாத்தியம் உண்டு. எவ்வளவுக்கு இவை சேகரித்தளிக்
கப்படுகின்றனவோ அவ்வளவிற்கு சங்கத்தின் கௌரவ
மும் மதிப்பும் குறையோ மேன்மையோ அடையும்.
இவ்விஷயத்தில் நான் பேசுகையில் சங்கத்திற் குரிய
உங்கள் கடமையொன்றைப்பற்றி எடுத்துக்கூற விரும்பு
கிறேன். ஒருகாலத்தில் மிகவும் பொறுப்புடனும், உற்
சாகத்துடனும், அபிமானத்துடனும் மனப்பூர்வமாயும்
கொடுபட்டுவந்த தலைக்கட்டுவரி, மஹமை முதலிய வரிப்
பணங்கள் இப்போது ஒழுங்காயும் ஒருநிலையாயும் வசூ
லாவதில்லையென்ற ஒரு குறைவு இருந்துவருகிறது.
வருப்பு முன்னேற்றத்தின்பொருட்டு நீங்கள் எத்தனையே
ளவ்வளவு அபிமானத்துடனும், விசுவாசத்துடனும்
வரிப்பணங்களைச் செலுத்தி வந்தீர்களோ அதேவித
மாப் இனியும் நடந்துகொள்ளுவது நான் உங்களை இத்
தருணத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போதுள்
ளதுபோல் நமக்குள் ஏகோபித்திருக்கவேண்டிய அவசி
யம் வேறெப்போதுமில்லை. நம்வருப்பினரனைவருக்குள்
ளும் ஐக்கியமிருக்கவேண்டிய அவசியம் இப்போது
போல் வேறெப்போதுமில்லை. வருப்பு ஒற்றுமைக்கும்
முன்னேற்றத்திற்கும் பாடுபடக்கூடிய நமது சங்கத்தை
வலிமைப்படுத்துவதற்கான இன்சொல்லுங்கள் இல்லாத
இடங்களில் அவைகளை ஸ்தாபித்து இருக்குமிடங்களில்

அவைகளை ஊக்கமெடுத்துழைக்கச் செய்வதைவிட வேறெவ்விதத்தில் இதை நாம் சாதிக்கக்கூடுமென்று எனக்குத் தோன்றவில்லை.

இது சம்பந்தமாக நான் ஒரு விஷயம் கூறாமலிருப்பது சரியாகாது. சமீபத்தில் நமது வகுப்பினர் பெரும்பாலோராய் வசித்துவரும் தென் ஜில்லாக்களில் நான் சுற்றுப்பிரயாணம் சென்றிருந்தபோது எனக்கு மனக்கிலேசமளிக்கத்தக்க ஒரு விஷயம் கண்டேன். அங்கு நமது வகுப்பினருள் மனவொற்றுமை இல்லாத காரணத்தால் பற்பல விரோதங்கள் இருந்துவருவதை நான் உணர்ந்தேன். அரசியல் விஷயங்களிலோ, சமுதாயச்சீர்திருத்த விஷயங்களிலோ அபிப்பிராய பேதங்களிருப்பது சகஜமேயாகும். அது ஒரு பாதகமென்றாவது இடையூறென்றாவது நான் கூறவில்லை. ஆயினும் நமக்குள் இருந்துவரும் மனவேற்றுமை நம் முன்னேற்றத்திற்கே பாதகமாயிருக்குமாயின் அது உடனே கவனித்துத் தீர்க்கப்படல்வேண்டும். இதைக் குறித்து தேவையாயின் மத்தியஸ்தர்கள் சபை ஒன்றை நாம் ஏற்பாடுசெய்து இனிமேல் ஒருகணமும் இவ்வித வேறுபாடுகளின்றி ஒற்றுமை ஏற்படுவதற்கு உபாயங்களைச் செய்யவேண்டும். பகிரங்கமாய் இவ்விஷயத்தை நான் எடுத்துக்கூறுவதில் என் கடமையில் தவறியவனாவேனென்ற உணர்ச்சியால் நான் இவ்வாறு கூறினேன் ஒற்றுமை.

நாம் செய்யவேண்டிய மற்றொருவகை வேலையைப்பற்றி நான் இப்போது சுருக்கமாய்க் கூறுகிறேன். நாம் எல்லைத்த வகுப்பினரோடு சம்மந்தப்பட்டு வாழ்

கிறமோ அவர்களோடெல்லாம் நாம் அன்னியோன்ய பாவத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்னும் என் அபிப்பிராயத்தையே நீங்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளுவீர்களென கம்புகிறேன். ஆழமாய் வேருன்றிக் கிடக்கும் அவநம்பிக்கை, பகை, அழுக்காறு முதலியன காரணமாக அடிக்கடி கலஹிச் சச்சரவுகள் மிகவும் பயங்கரமான வகையில் எற்படுகின்றனவென்பது பரிதாபகரமானதும் பரிதாபகரமானதுமான விஷயம். இவ்வாறு நான் கூறுகையில் தென் ஜில்லாக்களில் அடிக்கடி கம்வகுப்பினருக்கும் இதரவகுப்பினருக்கும் எற்படும் சச்சரவுகளே நான் ஞாபகத்திற்கொண்டிருக்கிறேன். இன்ன வகுப்பினர்தான் இக்குற்றத்திற்கு ஆஸ்பதமென்று நான் பொதுப்புச் சாட்டுவதாய் நீங்கள் தவருக நினைக்கவேண்டாம். இச் சச்சரவுகளின் துக்ககரமான விளைவுகளைப்பற்றியே நான் இங்கு கவனம் செலுத்துகிறேன். தொன்றுதொட்டு இருந்துவரும் கலஹிப்பகையை ஒழித்துவிடுவதென்பது செய்கையளவிலும் சாத்தியமானதென்றே எனக்குப் புலப்படுகின்றது. இந்த மகா காட்டில் அதைப்பற்றி கருத்துடன் கவனிக்கும்படி நான் வேண்டிக்கொள்ளுகிறேன். கலஹிப்பகைக்காதாரமான கொள்கைகளும், அபிப்பிராயங்களும் கற்றறிந்தவர்களிடமும் பரிந்துள்ளன. ஆகவே இவைகளை அகற்றி வகுப்பொற்றுமையையும் அன்னியோன்னியத்தையும் அமைப்பதன் பொருட்டு பிரசாரம் உடனே ஆபத்தமாகவேண்டும். இதர வகுப்பினரோடு சச்சரவின்றியே அந்தந்த வகுப்பினரும் தம்தம் முன்னேற்றத்திற்குப் பாடுபடலாமென்றும், வகுப்பு வேற்றுமையை ஒழித்தல், சமுதாய வேற்றுமைகளைக்களைதல், தாழ்த்தப்பட்ட வகுப்பின

ரைக் கைதூக்கல் ஸ்திரீகளின் சுவாதினம் முதலிய பொதுலட்சியங்களுக்காக எல்லா வகுப்புகளும் ஒன்று சேர்ந்து பிரயாசைப்படலாமென்றும் நான் நம்புகிறேன் இவ்விஷயத்தைத் தீவிரப்பிரசாரத்தால் நாம் எங்கும் பரவச்செய்து அன்னியோன்னியமும், கட்டும் வகுப்புகளுக்குள் நிலவிவரும்படி செய்து வகுப்புப் பகைமையை ஒழிக்கலாமென எனக்குத் தோன்றுகிறது. மதசம்பந்தமான வேறுபாடுகளை மட்டும் விட்டதால் நம்வகுப்பினர் சமீபத்தில் தென் ஜில்லாக்களில் நடைபெற்ற ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் அடைந்த பெரும் வெற்றியைக் குறித்து நீங்கள் சிறிது ஆலோசனை செய்தால் எல்லா வகுப்பினருள்ளும் அன்னியோன்னியம் ஏற்பட்டால் எம்மாத்திரம் சாதிக்க இயலும் என்பது தெற்றெனப் புலப்படும். நம் வகுப்பின் விபரீத நிலையொன்றை நான் உங்களுக்கு இவ்வருந் தருணத்தில் நினைப்பூட்டுகிறேன். சுமார் 20-லக்ஷம் ஜனங்களடங்கிய நம்வகுப்பினருக்கு பிரத்தியேக வாக்காளர் தொகுதியாவது ஸ்தலஸ்தாபன சபை, மாகாண சபை, முதலியவைகளில் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களாவது இல்லை. பண்டைக்காலக் கொள்கைகளில் இன்னும் பலர் ஆழ்ந்துகிடக்கும் இக்காலத்தில் வகுப்புச் சச்சரவு ஏற்படாதபடி தடுத்து இதர வகுப்பினரின் கட்டைப்பெற்று நாம் வாழும் பொருட்டு முயற்சி செய்யவேண்டியது மிக்க அவசியமாகும். இவ்வாறு ஜனசமூகத்தின் கட்டையும் சன்மதிப்பையும் சம்பாதிக்கும்பொருட்டு நம் வகுப்பினரைச் செய்யக்கூடியதென்ன வென்பது எனக்குப் புலப்படுகின்ற பொதுஜன நலமான பெருங்காரியத்தில் எல்

வளவிற்கு நாம் ஈடுபடுகிறோமோ அவ்வளவிற்கே நாம் இதர வகுப்பினரின் நன்மதிப்பிற்குரியவர்களாகிறோம். பொதுஜன சேவை சம்பந்தமாக சுமார் பத்து வருஷங்களுக்குமுன் சொற்ப சந்தர்ப்பங்களே கிடைத்தன. ஆனால் தற்சமயம் எங்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன. நமது முயற்சி முழுதும் பயன்படத்தக்கதான சந்தர்ப்பங்கள் உள்ளன. ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் நம்வகுப்பினரில் ஒவ்வொருவரும் பொதுஜன சேவையில் ஈடுபட்டுப் பங்குபெறத் தயாராயிருக்கிறோமென்பதை செயலால் நிரூபிப்பதே நாம் செய்யவேண்டியதாகும். உண்மையில் சுமார் 20-லக்ஷம்பேர் அடங்கிய ஒரு சமூகத்தாரின் முயற்சியால் விசேஷ பொதுநன்மை ஏற்படக்கூடும். நம்நலங்கருதியும் அதிலும் சிறந்ததான தேசநலங் கருதியும் நமது லட்சியங்களையே கொண்டு நம்முறைகளையொத்த முறைகளை அனுஷ்டிக்கும் இதர வகுப்பினரோடு ஒத்துழைக்கத் தீர்மானிப்பதென்பது ஒரு நல்ல யுக்தியாகாதாவென நான் உங்களைக் கேட்கிறேன். எவ்வாறாயினும் நாம் நமது வகுப்பிற்குரிய பாத்தியதைகளை நிலைநிறுத்தும் விஷயத்தில் ஈடுபடும்போதும் பகைமையும், சச்சரவும் விளைக்கக்கூடிய விஷயங்களைத் தவிர்க்கும்படி உங்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சமுதாய வேற்றுமைகள்.

நமக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தி நம்மேலைத் நிட்டத்தை முறைப்படுத்துவதும், பொதுஜன சேவையின்பொருட்டு இதர வகுப்பினரோடு ஒத்துழைப்பதும் அவசியமென்பதை நான் எடுத்துக்காட்டினேன். கொண்டு

நல விஷயத்தில் எத்துறைகளில் நம் \வகுப்பினர் சீடு படலாமென்பது சம்மந்தமாய்ச் சில வார்த்தைகள் என்னிடம் நீங்கள் எதிர்பார்ப்பீர்களென நான் நினைக் கிறேன். இதுகாலே நீண்டாமை யொழித்தல், ஆலயப் பிரவேச உரிமை என்ற இருவிஷயங்களேச் சார்ந்த பெருத்த போராட்டம், இதர எல்லாவிவகாரங்களேயும் மறைத்துவிட்டது. இவ்விரு நெருக்கடியான விஷயங் களின் முடிவையே இந்துமதத்தின் எதிர்காலம் மிகுதி யும் சார்ந்திருக்கிறது. இவைகளேப்பொருத்து நடந்து வரும் கொடிய போராட்டத்தைப்பற்றி உங்களனை வருக்கும் தெரியும் இவைகளுக்கு ஆதரவும், எதிர்ப்பும் கலந்து தோன்றுகின்றன. தென்னாட்டில்தான் நிலைமை மிகவும் மும்மரமாயிருந்துவருகின்றது. யுத்தி புத்திபிலும் நிறமையிலும் சிறந்த கனவான்கள் இரு கட்சியிலும் உள்ளனர். இவ்வியக்கத்திற்கு ஆதரவாயும், விரோத மாயும் ஆகமங்களென்ன, புராணங்களென்ன, சாஸ்திரங்க ளென்ன, நீதிபதிகளின் தீர்ப்புகளென்ன முதலியன யாவும் மிகவும் கரிசனமாய்த் தேடப்பட்டு வருகின்றன. எனக்குத்தோன்றியவரையில் இவ்வியக்கம், இந்துமதத் தினரில் பெரும்பாலோரின் கோரிக்கைக்கும், கால மாறுபாட்டிற்கும் ஏற்றவாறு அம்மதம் தானுகவே தகுந்தபடி மாறுபடச் சம்மதிக்கின்றதா அல்லவா என்ற ஒருகேள்வியைப் பிறப்பித்திருக்கின்றது. இவ் வியக்கம் தோன்றுவதற்கு வெகுகாலம் முன்னமேயே நாம் இவ்வித மாறுபாடுகளேக் கோரிவந்திருக்கிறோம். ஆகவே இந்த இயக்கத்திற்கு நம் பூரண ஆதரவும் அனுதாபமும் இருப்பதே தீரும். இந்துமதத்தின் பல பிரிவினருக்கும் ஒரே தான இந்தராமானிய உரிமை

களை வழங்கும் விஷயத்திலும்கூட இவ்வளவு பலத்த எதிர்ப்பு வைதிகத்தினால் எற்பட்டிருப்பது வருந்தத் தக்கது. இவ்விஷயத்தில் கற்றறிந்தவர்களும் கூட விரோதமாயிருப்பது எனக்குப்பின்னும் வியப்பை விளைவிக்கின்றது. புதிய கொள்கைகளை ஆதரியாத என் நண்பர்கள் சிலரின் எதிர்ப்புக் காரணமாய் இதுபோன்ற ஒரு விஷயத்தை நான் கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டி முன்பு கொண்டுவந்தபோது அது வீணாய் முடிந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். சகாவாசத் தினுள்ள கற்றறிந்தவர்களின் மனப்பான்மையே இவ் வாறிருப்பின், மாறுபாடுகளை விரைவில் எற்கச் சம்மதி யாத நமது கிராமவாசிகளின் மனப்பான்மை இவ்வியக் கத்திற்கு இன்னும் விரோதமாயிருப்பது ஒரு ஆச்சரிய மன்று. சமத்வம் கொண்டாடுதல் என்ற சகஜ உணர்ச் சியால் எற்பட்டுள்ள இவ்வியக்கத்தை முற்றிலும் அழித் தலென்பது இயலாதகாரியம். தீண்டாமை, ஆலய பிரவேச நிர்ப்பந்தம் என்ற விஷயங்களில் ஸ்வாதீனம் நிலையாக ஸ்தாபனமாகும் காலத்தை வேண்டுமாயின் வைதிகம் கடத்தலாம். இந்தமதத்திற்கே ஆபத்து சேரிட்டதாக இடப்படும்கூக்குரலும் சாத்வீகச் செய் கைகளும் ஆக்ரமிப்புச் செயல்களெனக் குறைகூறும் போக்கும் கட்டுப்பாடுகளைக் கிலேசாட்டமுயலும் வைதிக வைராக்கியத்தின் விபரீதங்களேயாகும். மதவைராக் கியத்தினுல் எற்பட்டுள்ள நிர்ப்பந்தங்களினின்றும் விடு தலைபெற காமும் நியாயான இவ்விஷயத்தை முழு மனதுடன் ஆதரிப்பதே நமது தெளிவான கடமையா கும். இத்தீமைகளை ஒழிக்கும் விஷயத்தில் சென்னை அரசாங்கத்தின் மாஜி முதன் மந்திரியான டாக்டர் சுப்ப

ராயன் அவர்கள் தன் நிர்வாக காலத்தில் எடுத்துக் கொண்ட ஜக்கமும் கருத்தும் இப்போதும் அவர் காட்டிவரும் அனுதாபமும் போற்றத்தக்கது. கம்வகுப் பினர் அவருக்கு எம்மட்டும் கன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்களென நீங்கள் அறிவீர்கள். தாழ்த்தப்பட்ட வர்கள் சார்பில் ஆலயப்பிரவேச விஷயமாய் அவர் இப் போதம்கொண்டுவந்துள்ள மசோதா சென்னை கவர்ன் மெண்டாரால் இந்திய சுவர்ன்மெண்டாருக்கு அனுப் பப்பட்டு அவர்களின் அனுமதியை எதிர்பார்த்திருக் கின்றது. இவர் எடுத்துள்ள கன்முயற்சி வெற்றிக ரமாய முடியவேண்டுமென்பது கமது கோரிக்கையாகும். கான் மேற்கூறிய இரண்டு தீமைகளையும் ஒழிக்கும் விஷய மாகச் செய்யவேண்டிய தீவிரப்பிரசாரத்தைகம் வேலைத் திட்டத்தில் முன் அணியில் வைக்கவேண்டும் தன் அவசியத்தை ஆலோசிக்குமாறு நான் கேட்டுக்கொள்ளு கிறேன.

சமுதாய முன்னேற்றம்.

கமக்குள்எகோபித்தஅபிப்பிராயமிருக்குமென நான் எதிர்பார்க்கும் சமுதாயச் சீர்திருத்தமென்பது ஒரு மனிதனின் சுகாதாரம் முதல் எல்லாவிவிருத்தி யுள்பட அனேகம் அடங்கிய ஓர் பெரிய விஷயம். வகுப்பு முன்னேற்றத்திற்கும் தேச கலத்திற்கும் பாதகமான பல பழக்கங்களும், வழக்கங்களும் கம்மிடையிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையிலும் காணப்படுகின் றன. மாறுபாடுகள் வெகு தூரமாய் எற்பட்டுவரும் இக்காலத்தில் எல்லாவற்றிலும் சீக்கிரமாயும் தீவி ரமாயும் இவைகளை தெரியப்படுகின்றனவோ அவ்வள வுக்கவ்வளவு கமது வகுப்பிற்கும் காட்டிற்கும் கலமா

2/9070

கும். முன்னேற்றத்திற்கிடை[illegible] பழக்க
கங்களில் ஒன்றைமட்டும் இங்கு காண்பதற்காகமாய்
எடுத்துக்காட்டுகிறேன். ஸ்திரீகளுக்கு வாக்குரிமை
யளிக்கும் விஷயத்தில் பல நிர்ப்பந்தங்கள் இருந்துவரு
கின்றன. ஸ்திரீகளுக்குள் இருந்துவரும் வருப்பு வேற்
றுமைகளும், சமுதாய வேற்றுமைகளும், கல்வியறி
வின் நிலையில் வேறுபாடுகளும் இளம்பிராயமிருந்து
அவர்கள் பழகும் பழக்கவழக்கங்களும் இவ்வித இடை
யூகளாகும். நமது மகாகாட்டுடன் இவ்வருஷம்
சேர்த்து நாம் கடத்தும் கல்வி மகாகாட்டில் ஸ்திரீ
களின் கல்விவிஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தி
யதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். கல்வியை
ஆதாரமாகக்கொண்டு ஸ்திரீகளுக்கு வாக்கு சுதந்திரம்
அளிக்கலாமென போதிக்கப்பட்டுவரும் இந்த சமயத்
தில் இவ்விஷயத்தை நாம் ஊக்கமாய்க் கவனிக்கவேண்
டும். துருக்கியின் சரித்திரத்தை நாம் ஆராய்வோமா
யின் இதுவரை மிகவும் வைதிகமாயிருந்த அக்காட்டில்
மூன்டபா கெமால் பாச்சாவின் பெருத்த ஊக்கத்தி
னால் விபக்கத்தக்க சீர்திருத்தங்கள் ஏற்பட்டுள்ளன.
இவர் முகமூடியின் காலத்தை அறவே முடித்து, அரி
யர்கள் அசாங்க உத்தியோகஸ்தர்கள் முற்போக்
கான அபிப்பிராயங்கொண்ட ஸ்திரீகள் முதலியோரின்
பிரசாரம் மூலமாய் துருக்கி ஸ்திரீகள் முழு ஸ்வாதீன
மடைவதை சாத்தியமாக்கிவிட்டார். துருக்கியப் பெண்
களுக்குக் கல்வி போதிக்கும்பொருட்டு காடெங்கும்
கல்விச்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. ஆகவே சமீப
காலத்தில் இக்காடு காகரீகத்தில் முன்னேற்றமடைந்த
நிலையிலும் என்று நம்பப்படுகிறது. பெண்கல்வி

Y5926.N.211N32
N32

சம்பந்தமாக பெண் பாடசாலையில்லாத கிராமமும் கல்வி பயிலாத பெண் உள்ள குடும்பமும் கருதுகாட்டிலேயே இருக்கத் தகாதென ஜப்பான் அரசு ஆக்ஞை இருந்து வருவதை மனதிற்கொண்டு அதையே நம் லட்சியமாக வைத்து காம் உழைப்போமாயின் நமது ஸ்திரீகள் எல்லாம் சமீபகாலத்தில் வாக்குரிமைக்கு அருகதைபெற்று விடுவது நிச்சயமாகும். இதற்கதிகம் நான் இங்கு எடுத்துரைக்க விரும்பவில்லை. பொதுவாக நம் சமூகத்திடையே கல்லாமையகற்றுவதைக் குறித்துமட்டும் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். நமது வகுப்பினரான வருக்கும் கல்வி போதிப்பதைத் தவிர இதர விரிவான திட்டங்களைப்பற்றி ஆலோசிப்பதற்கு எற்றகாலம் இதன்று. நமது வாலிபர்களுள் சிலர் ஐ.ஸி.எஸ்., யோக்கியதை பெறுவதோ அல்லது நமது ஸ்திரீ புருஷர்களில் சிலர் உயர்ந்த பட்டங்கள் பெறுவதோ நம் வகுப்பினருள் பொதுவாகப் பரவியிருக்கும் கல்லாமையிற்கு ஓர் அருமருந்தாகாதென்பது எனது உறுதியான எண்ணம். நம் வகுப்பினர் மட்டுமேயன்றி இதர வகுப்பினரும் ஐக்கியப்பட்டு நாமனைவரும் ஒன்று என்று பெருமை கூறுவதற்கு ஆதாரமாக சமூகவாழ்வில் எற்படவேண்டிய மாறுபாடுகளுக்கு எல்லா சிறுவர்களும் சிறுமிகளும் கல்விபயில வேண்டுவது இன்றியமையாததாகும்.

நம்வகுப்பினுள் கல்லாமையிருந்தாலன்றி தென்படும் சமூகச் சீர்திருத்தத் திட்டத்தின் ஒரே இலக்கன்று. சடங்குகளில் வீண் செலவு பால்ய விவாகம் சமுதாய வேறுபாடுகள் முதலிய வைகள்போன்ற தீயபழக்கங்களை ஒழிப்பதற்குச் செய்யப்படும் எவர்ச்சி நமதுஜனங்களின்

பெரும்பாலோருக்கு முறையாகப்படுவதில்லை. நமது வகுப்பினரில் பண்டைக் கொள்கைகளையே பற்றிவரும் முதியோர்களில் இருபாலோரையும் நாம் பிரசாரம் செய்து புதிய கொள்கைகளைப் புகட்டுவது நமது கடமையாகும். இவ்வாறு செய்வதால் வகுப்பு முன்னேற்றத்திற்குச் சாதகமான மாறுபாடுகளுக்கு அவர்களால் ஏற்படும் இடையூறுகள் விலகும்.

வாலிபர் கடமை.

பெறுதற்கரிய இந்தப் பொறுப்பை நமது வாலிபர்களே ஏற்கவேண்டும். சமீபத்தில் ஸ்ரீ சுந்தாமணியவர்கள் கூறியுள்ளதுபோல நமது வகுப்பின் எதிர்காலம் 25-வயதுக்குட்பட்ட நமது வாலிபர்களையும் பெண்களையும் பொருத்ததாகவே யிருக்கின்றது. நமது முதியோர்களின் காலம் கடந்து வருகின்றது. நம் வகுப்பினருள் அவர்களுக்குள்ளசெல்வாக்கும் குன்றியே வருகின்றது. அவர்கள் ஏற்கனவே செய்துவந்த வேலை மாறுபாடடைந்துள்ள இக்காலத்தில் முழுமனதுடனும், ஊக்கத்துடனும் உழைக்கக்கூடிய வாலிபர்கள் ஏற்கவேண்டிய கடமையாகின்றது. சான்மேலே கூறியுள்ளதிலிருந்து இவர்களின் வேலை பெரும்பாலும் கிராமங்களிலேயே அமைந்திருப்பது விளங்கும். சிறப்புக் குறைந்துள்ள ஒரு சமுதாய நிலையின் நிலைகளை ஒழித்து சீர்திருத்த உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு! கிராமங்களில் சென்று உழைக்கும் நமது வாலிபருடையதேயாகும். ஆந்திர சர்வ கலா சாலையின் உதவி அதிபரும்சகரான பெரியார் கூறியுள்ளபடி மதமென்ற நாமத்தில் லாபக்கணக்கான நமது

சகோதர சகோதரிகளுக்கு சகஜமான உரிமைகளையும் வழங்க மறுக்கும் இந்த வைராக்கியத்தை எதிர்த்து மாற்றவேண்டுவது ஓர் முக்கிய கடமையாகும். இவ்விஷயத்தில் நமது வகுப்பினர்மீதுமட்டுமே குறை கூறுவதற்கில்லை. ஆகவே நமது வாலிபர்களுக்கு இது சம்மந்தமாகத் தொண்டாற்றுவதற்கு நம் வகுப்பினிடைமட்டுமன்றி இதர வகுப்புகளிடையிலும் சந்தர்ப்பங்கள் ஏராளமாய் வாய்த்துள்ளன. நம்மில் எவ்வளவு அற்பராயினும் இக்காரியத்தில் ஈடுபட்டு நம்மாலியன்றதைச் செய்யலாம். பழையன கழிந்து புதியன புகுங்காலமான இக்காலத்தில் ஜனசமூக சேவையின் பொறுப்பை நமது வாலிபர்கள் ஏற்கவேண்டுவது அவசியம். பொது ஜன சேவையில் மனப்பூர்வமாயும், முழு ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் ஈடுபடவேண்டுவது அத்யாவசியம் என்பதைவிட நம் வாலிபருக்கு வான் புகட்டக்கூடிய புத்தி எதுவுமில்லை. இதற்கு உப சாதனங்களான பொருள், ஓய்வுகாலம், தேகவலிமை, நியாக உணர்ச்சி முதலியன ஒருங்கேயோ அல்லது தனித்தனியாகவோ அமையப்பெற்றுள்ள நமது வாலிபர்கள் நகரங்களிலும் நாடுகளிலும் வாழ்க்கை சாதனங்கள் குறைந்த தமது சகோதரர்களிடையே ஊழியம் செய்யவேண்டும். சமூகச்சேவை உணர்ச்சி நிரம்பியவர்களாக வைதிகம் வலுவாய் வேருன்றிக் கிடக்கும் நாட்டுப்புறங்களில் சென்று தொண்டு புரியப்புறப்படும் வாலிபர்களுக்கு அன்பான வரவேற்பு நிச்சயம் அளிக்கப்படும் என்பதற்கு ஐயமில்லை. இதுவே கிராமப் புனருத்தாரண வேலையின் நிட்டமாகும். சமீபத்தில் நமது மூன்றாவது மந்திரியான திவான்பகதூர் சுமாசாமி செட்டி

யார் செய்த ஓர் பிரசங்கத்தில் "நமது தேசத்தின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது கிராமப்புனருத்தாரணம். முற்காலத்தில் இந்திய நாகரீகம் வளர்த்தது காட்டுப்புறத்திலேயேயாகும். தன்னலங்கருதாத ஒரு வாலிபர் கோஷ்டியினரின் அவசியம் இப்போதுள்ளது போல் எப்போதும் இருந்ததில்லை" என்று மொழிந்துள்ளார். இம்மொழிகளுக்கு நாம் அளிக்கத்தக்க விடை யென்ன? இக்கிலேயில் தன்ஜ. லி.எஸ். பதவியைப்புறக் கணித்து காட்டுப்புறங்களின் முன்னேற்றத்திற்கெனப் பாடுபடத் தீர்மானித்து தன் உடல் பொருள் ஆவியைத் தத்தம் செய்ததாகத் தென்னாட்டுச் சிறுகதை ஆசிரியர் வர்ணித்துள்ள "தேசாபிமானி கந்தன்" என்பவரை நான் உங்களுக்கு முன் மாதிரியாக எடுத்துக் காட்டு வேன்.

சுதேசி இயக்கம்.

என் பிரசங்கத்தை நான் முடிக்குமுன் பெரும் பாலும் வர்த்தகத்திலீடுபட்டுள்ள உங்களுக்கு சுதேசிப் பொருள்களை ஆதரிக்கும் விஷயமாய் ஒரு வார்த்தைகூற விரும்புகிறேன். அத்தகைய காடும் அதில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களையே கூடியவரை உபயோகித்து ஆதரிக்குமாறு குடிகளை வற்புறுத்திவரும் விஷயம் உங்களில் அனைவரும் அறிந்ததாகும். நமது மாகாணத்திலும் டாக்டர் சுப்பராயன் போன்ற பல செல்வாக்குள்ள பிரமுகர்களும் இத்துறையில் சிறந்த தொண்டு புரிந்து வருகின்றனர். மாஜிமை தங்கிய நமது அரசியாரும் தமது கிறிஸ்து பண்டிகை சம்பந்தமான பரிசுப் பொருள்களை வாங்குகையில் அவை பிரிட்டிஷ் சாம் ராஜ்யத்திற்குள் உற்பத்தி செய்யப்பட்டவைகளாகவேயிருக்

தல் வேண்டுமெனப் பரிந்து வாங்கியதாக காம் பத்திரி கைகள் வாயிலாய் அறிகிறோம். ஆகவே நம்மிந்த மகா காட்டில் கமது ஜனங்களனைவரும் சுதேசி இயக்கத்தை ஆதரித்தருளுமாறு தேசகலங்கருஷி காம் முறையிட்டுக் கேட்பது ஒரு ஞாயமேயாகும்.

வேண்டுகோள்.

என் பிரசங்கம் முடியுந்தருவாயடைகின்றது. காம் வகுப்பினர் மனதிலுள்ள சில குறைகளைப்பற்றியும் அவர்கள் செய்ய உத்தேசித்துள்ள முறைப்பாடுகளையும் எதிர்பார்த்து கான் என் பிரசங்கத்தில் கூறவில்லையென நீங்கள் முறையிடலாம். இவ்விஷயங்கள் விடப்பட்டுள்ள வென்பதை கான் அறிவேனாயினும் அவைகளை வெளியிடு வதற்குரிய உங்கள் சுவாதீனத்தைக் குறைக்க அஞ்சி வேனும் கான் எண்ணவில்லை. அவை ஒவ்வொன்றையும் கன்கு விவாதித்து அவைகளைக்குறித்த தீர்மானங்களை நிறைவேற்றுவீர்களாக. ஆனால் என் கோரிக்கையொன் றைமட்டும் நீங்கள் கேட்குமாறு வேண்டுகிறேன். தீர் மானங்களைப்பிரேரேபித்து நிறைவேற்றுவதில்லீங்கள் இந்த மகா காட்டில் நிறைவேறும் தீர்மானங்கள் அடுத்த மகாகாடு காம் கூடும் காலத்திற்குள் அனுஷ்டானத் திற்குச் செயல்களில் வகுவிடவேண்டுமென்ற கோக்கத் தைக்கைக்கொள்ள வேண்டும். ஏற்கனவே கடைபெற்ற கமது பல மகா காடுகளில் நிறைவேறிய தீர்மானங்கள் பல, வார்த்தைகளிலிருந்து வருவதால் இதை கான் வற் புறுத்தலாயிற்று. தீர்மானங்களை நிறைவேற்றுவது மிகவும் எளிது. ஆனால் அவைகளை அனுஷ்டானத்திற் குக் கொண்டுவருவதென்பது மிகவும் கடினம். கமக்கு

அவசியமான சில விஷயங்களில் மட்டும் முழு கவனத்தையும் செலுத்துமாறு கான கேட்டுக்கொள்ளுகிறேன்.

என் குறுகிய பிரசங்கத்தின் அளவில் எவ்வளவு கூடுமோ அவ்வளவு நம் வருப்பின் தற்கால நிலையையும் எதிர்கால நிலையையும் எடுத்துரைத்தேன். நமது வருப்பு முன்னேற்றத்திற்கும் அதன்மூலம் தேசநலத்திற்கும் உங்களாலியன்ற உதவிபுரியுமாறு உங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இங்கு கூடியுள்ள ஒவ்வொருவரும் நம்முன் உள்ள மகத்தான வேலையில் முழு கவனத்தைக்கொண்டு அது சம்பந்தமான வேலையில் ஊழியஉணர்ச்சியுடனும், நிர்மானத்தாடனும் தன்னம்பிக்கையுடனும், தங்கள் கடந்த வற்புறும் தலைவர்களிடம் நம்பிக்கையுடனும், சுறுசுறுப்புடனும் நடந்துகொள்ளவேண்டுமென்ற நினைவான என்னத்தையே என் பிரசங்கம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. முடிக்குமுன் நான் செய்துகொள்ளும் முறையீடு யாதெனில் வகுப்பு கலகத்தையும், தேச முன்னேற்றத்தையும் கருதுகிறவர்களனைவரும் தன்னல உணர்ச்சியை ஒழியுங்கள். எக்கச் சமயத்தில் நாம் ஒடுபட்டு நிற்கிறோம் எப்படியும் நமது முன்னேற்றம் பெரும்பாலும் நம்கையிலேயே உள்ளது என்ற உண்மையை உணர்ந்தவர்களாய் ஒத்துழைப்பு ஆன்மிபோன்னியம் என்ற மகோன்னத ஆதர்சநிலையை எப்போதாவது உலகத்தில் நிலைநிறுத்தக் கூடியவர்களெல்லாரும் ஒத்துழைப்பின் பயனாகவே ஏற்படுத்தியுள்ளனர். உலகிலும் வேறு

பாடுகளை நீக்கி ஒற்றுமைப்பட்ட இதர வகுப்பினரோடு அன்னியோன்னியத்தையும் கட்டையும் ஸ்தாபித்து நம முன்னிருக்கும் பெருத்த பொறுப்பை விளித்து கடத்து கையில் 'சீர்தூக்கிப்பார்க்கையில் நீ தருதியற்றவனுய்' என்ற தீர்ப்பினின்றும் தப்புவிக்க வழிதேடுவோமாக.

இறைவனின் அருள் நமக்கேற்பட்டுள்ள தென்ற நிண்ணத்துடன் நல்ல காரியங்களே காரம் கவனிப்போமாக.

சுபம்.

219070

RATNA
VILAS PRESS,
PORAYAR.

219070